முருகப்பெருமான் துணை

**மகான் குமரகுருபரர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.06.2023**, வெள்ளிக்கிழமை

1. குருவருளாக மக்களிடை வழங்கி
குருபரனை காணும் முகாந்திரம்
பேருலகில் மக்களுக்குத் தர
பிரணவ சக்தியாக வந்த அரங்கா
2. அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் சோபகிருது விடைதிங்கள்
வரங்களென மூவாறோர்திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 19 ம் நாள், 02.06.2023, வெள்ளிக்கிழமை)
வல்லமைபட அறிவுரை ஆசி
3. ஆசிதனை குமரகுருபரர் யானும்
அருளுவேன் உலகோர் நலம்பெற
பேசிட தரும ஞான வழிபட
பிரணவத்தின் மகா சக்தி அறிய
4. அறியவே கலியுகம்தன்னில்
ஆற்றல் மிக்க பிரணவக்குடிலை
துறையூர் மண்ணில் படைத்து
தவதரும பலமோடு அருளும்
5. அருளும் அரங்கமகானை நாடி
அனைவரும் தீட்சை ஏற்று
வரமாகும் சன்மார்க்க நெறியில்
வணங்கி உள் கிடத்தி
6. கிடத்தி வேலவன் வழிபாடே
குவலயம் காக்கும் என
இடரின்றி தொடர்ந்து செய்து
எல்லாம் அவன் செயல்வடிவென
7. வடிவென முழு சரணாகதி
வணங்கிக் கொண்டு வர
தேடிவந்து ஆறுமுகப் பெருமான்
தேசிகனார் குருவருள் வழி

8. குருவருள் வழியே திருவருளாக
குவலயம் எங்கும் வெளிப்பட்டு
முருகப் பெருமான் ஆளுமைபட
முழுமைபட உலகம் மாற்றம் காணும்

9. காணவே கலியுக மாற்றமாக
கந்தனால் பெருமைபடவே
ஞானயுக மாற்றம் காணும்
ஞானவான்களாகத் தேற்றம் அடைந்து

10. அடைந்து அரங்கன் சீடர்கள்
அழியாமை மிக்க ஞானிகளாக
அடைவது கலியினில் உறுதி
அரங்கன் வழி முருகப்பெருமான்

11. பெருமான் அற்புதம் படைக்க
பேதமற எல்லாம் சித்தியாக
வருங்காலம் கண்டு ஞான ஆட்சி பெறும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—